நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள்.27.07.2021

## சாதாரணக்கூட்டம்

அம்பாசமுத்திரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2021ம் வருடம் ஜுலை மாதம் 27ம் தேதி (27.07.2021) செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு தனி அதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 27.07.2021 | 863 | **பொருள் எண்: 1**<br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டி, ஊர்காடு இராமர் கோவில் நீரேற்று நிலையம் மற்றும் ஊர்காடு சுடலைகோவில் நீரேற்று நிலையங்களில் இருந்து இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் நலன் கருதி, தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டி விநியோகம் செய்யப்படும் குடிநீரில் Liquid Chlorination Plant மூலம் குளோரின் கலக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட Liquid Chlorination Plant க்கு 2021–22 ஆம் ஆண்டுக்கு Liquid Chlorine கொள்முதல் செய்யும் பணியினை தேர்வு செய்தும், மேற்காண் பணிக்கு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.95– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி , மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 864 | **பொருள் எண்:2**<br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. அதற்காக இந்நகராட்சி மூலம் குடிநீர் விநியோகத்திற்காக பம்பிங் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பம்பிங் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக, 2021–22 ஆம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள், மேற்கொள்ளும் பணியினை தேர்வு செய்தும் மேற்காண் பணிக்கு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.95– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 865 | **பொருள் எண்: 3**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி குடிநீர்திட்ட பராமரிப்பு செய்யும் பணிக்கு, 2021–22ம் ஆண்டிற்கு Bleeching powder வாங்கும் பணியினை தேர்வு செய்தும், | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்காண் பணிக்கு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,00,000– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். இப்பணியினை நகராட்சி குடிநீர் திட்டநிதியில் இருந்து பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | |
| 27.07.2021 | 866 | **பொருள் எண்: 4**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட 12 வது வார்டு ரஹ்மான் தெரு மின் கம்பம் எண் 19S60 ல் புதிய மின் பாதை அமைத்து புதிதாக ஒரு LED தெரு மின் விளக்கு அமைக்க மன்றத்தின் அனுமதிக்கும் அதற்கு ஆகும் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது . | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 867 | **பொருள் எண்: 5**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட 15 வது வார்டு மேலத் தெரு மின் கம்பம் எண் 057–006–22 ல் புதிய மின் பாதை அமைத்து புதிதாக ஒரு LED தெரு மின் விளக்கு அமைக்க மன்றத்தின் அனுமதிக்கும் அதற்கு ஆகும் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 868 | **பொருள் எண் : 6**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி உள்ள 52 சின்டெக்ஸ் பம்ப்ரூம் மற்றும் 22 கழிப்பறைகளில் ஏற்படும் மோட்டார் பழுது மற்றும் இதர பழுதுகளை, பழுது நீக்கம் செய்ய 2021–22ம் ஆண்டிற்கு ரூபாய் 3.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காண் பணியினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து பணிமேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 869 | **பொருள் எண் : 7**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி 21வது வார்டு ஆசிரியர் காலனி மெயின் ரோட்டில் அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்ற நீதபதி அவர்கள் குடியிருக்கும் வீட்டின் முன்பு (EB POLE 5ல்56)ல் புதிதாக தெரு மின் விளக்கு அமைப்பதற்கும் அதற்கான செலவினத் தொகையினை அம்பாசமுத்திரம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 870 | **பொருள் எண் 8**<br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி உரக்கிடங்கிள் 30 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் FSTP (Feacel Sludge Treatment Plant) அமைக்கும் பணி முடியும் நிலையில் உள்ளது. மேற்கண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண் 26888/2018/UGSS–2 நாள் 05.02.2021 ல் அறிவுறுத்தியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் , செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | |
| 27.07.2021 | 871 | **பொருள் எண்: 9**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி திரவ கழிவு மேலாண்மை தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தின் Consent to operate அனுமதி பெறுவதற்கு நீர் மாசு சட்டம் (Water Act) மற்றும் காற்று மாசு சட்டம் (Air Act) க்கு ரூ 43,600/ஐ (GO MS NO 40) EXF(EC-1 Dept நாள் 09.04.2018 Air Act ன்படி மாவட்ட சுற்றுப்புற பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டுவாரியம், திருநெல்வேலி அவர்களுக்கு வங்கி வரைவோலை மூலம் செலுத்துவதற்கும், மேற்காண் தொகை ரூ 43,600/–ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 872 | **மன்ற பொருள் : 10**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண் 12 R.S. நியூ காலனி 2வது தெருவில் மின்கம்பம் எண் EP49W21 மற்றும் மின்கம்பம் எண் EP49W23 ஆகிய மின்கம்பங்களில் புதிதாக தெரு மின் விளக்குகள் அமைத்திட மன்றத்தின் அனுமதிக்கும், மேற்காண் 2 தெரு மின் கம்பங்களில் புதிய தெரு மின் விளக்குகள் அமைக்க ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 873 | **மன்ற பொருள் 11**<br>இயக்குநர், நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண் 276/2020/ஆ2 நாள் 15.03.2021 இதன்படி 2020–21 ம் ஆண்டுக்கான இந்நகராட்சியின் ஆண்டு பங்கு தொகையை ரூ 20,000/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படிஉரிய பங்கு தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| 27.07.2021 | 874 | **மன்ற பொருள் 12**<br>இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை 2019–20 ம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண் 58 ல் இந்நகராட்சிக்கு 2019–20ம் ஆண்டு தணிக்கை கட்டணம் ரூ 61,180/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படிஉரிய பங்கு தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

**தனி அலுவலர்/ ஆணையாளர்**

**அம்பாசமுத்திரம் நகராட்சி**